மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நில நிர்வாக ஆணையர் மூலம் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இத்திட்டத்திற்கு 2.20 ஏக்கர் வன நிலங்கள், 8.62 ஏக்கர் பட்டா நிலங்கள் மற்றும் 2.36 ஏக்கர் புறம்போக்கு நிலங்கள் ஆர்ஜிதம் செய்ய உள்ளது. சுற்றுப்புறச்சூழல் மற்றும் வனத் துறை, பொதுப் பணித் துறைக்கு குத்தகை அடிப்படையில் வன நிலங்களை ஆர்ஜிதம் செய்ய ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்ட மதிப்பீடு 2002-2003 ஆம் ஆண்டு விலை விகிதப்படி ரூபாய் 86 இலட்சமாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 82.56 ஏக்கர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெற வாய்ப்புள்ளது. இத்திட்டத்திற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒத்திசைவு பெறப்பட்டிருக்கின்றது. இத்திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது. வரும் நிதியாண்டுகளில் நிதிநிலைக்கேற்ப இப்பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி ஆர். சசிகலா.

திருமதி ஆர். சசிகலா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 322, திரு. கோ. இரவிராஜ், மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்.

322—

ஏரியைத் தூர்வாருதல்

***17791—திரு. கோ. இரவிராஜ்:**

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடம்பத்தூர் ஒன்றியம், கூவம் ஊராட்சிக்குட்பட்ட பெரிய ஏரியைத் தூர்வார அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

TRUTH ALONE TRIUMPHS

[2003 ஏப்ரல் 25

திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஒன்றியம், கூவம் ஊராட்சிக்குட்பட்ட பெரிய ஏரியை தூர்வார கருத்துரு தற்போது அரசின் ஆய்வில் உள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. கோ. இரவிராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தணி தொகுதி, கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குள் இருக்கிற கூவம் பெரிய ஏரி என்பது சுமார் 2,325 ஏக்கர் அளவு பாசனத்திற்குப் பயன்படக்கூடிய ஒரு முக்கிய ஏரியாகும். இந்த ஏரி இந்தப் பகுதியிலே உள்ள கூவம், கூவம் பள்ளக்காலனி, மேட்டுக்காலனி, குமாரச்சேரி, குறுக்கம்பேடு, எலம்பாக்கம், கள்ளம்பேடு, பிள்ளையார்குப்பம், கீழச்சேரி போன்ற கிராம விவசாயிகள் பயனடையக்கூடிய ஒரு மிக முக்கிய ஏரியாகும். இந்த ஏரியினுடைய கரை மட்டும் சுமார் 5 கி.மீ. தூரம் உள்ளது. 12 மதகுகள் இருக்கக்கூடிய ஒரு பெரிய ஏரி. தற்போது மதகுகளும் உடைந்து, ஏரியினுடைய கரைகளும் உடைந்து தூர்ந்துவிட்ட நிலையிலே இருக்கக்கூடிய இந்த ஏரியை இந்த நிதியாண்டிலேயே, அப்பகுதியினுடைய விவசாயிகளுடைய பல்லாண்டுகால கோரிக்கைக்கு ஏற்ப தூர்வாருவதற்கும், செப்பனிடுவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன். பல ஏரிகள் தமிழ்நாட்டிலே ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு மழை பெய்கிறபோது அந்தத் தண்ணீரை தேக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவே, தண்ணீர் இருக்கக்கூடிய நீர்ப்பிடிப்பு பகுதிகளில், அந்த ஏரிகளிலே விஸ்தீரனமாக உள்ள இடங்களிலே சமூகக்காடு வளர்ப்புத் திட்டத்தின் மூலமாக பல மரங்களை நட்டு ஆக்கிரமிப்புகள் ஏற்படாத வண்ணம் நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், கூவம் பெரிய ஏரி பாசனப் பரப்பு 930 ஹெக்டேர் ஆகும். ஏரிக் கரையின் நீளம் 5,029 மீட்டர். ஏரியில் 12 மதகுகள் மற்றும் 4 கலிங்கல்கள் உள்ளன. ஏரியின் மொத்த நீர்ப்பிடிப்பு பரப்பளவு 11.40 சதுர கி.மீ. ஆகும். வரும் நிதியாண்டில் இந்த ஏரியைத் தூர் வாரும் பணி நிதிநிலைக்கு ஏற்ப எடுத்துக் கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்

2003 ஏப்ரல் 25]

பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏரியின் ஆக்கிரமிப்பினை அகற்றி, அங்கே நீர்ப்பிடிப்பு இருக்கின்ற பகுதிகளில் மரங்கள் நடுகின்ற திட்டத்தினைப் பற்றிச் சொன்னார்கள். அத்திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதனைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. இரவிராஜ்.

திரு. கோ. இரவிராஜ்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 323, திரு. கா. கந்தசாமி, மாண்புமிகு நிதி அமைச்சர்.

323—

தார்ச் சாலை

***3736—திரு. கா. கந்தசாமி:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் சாலையிலிருந்து கரிமராஹட்டி வரை மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் தார்ச் சாலை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 2001-2002 ஆம் ஆண்டிற்கான பணிகள் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டதால், குன்னூர் சாலையிலிருந்து கரிமராஹட்டி வரையுள்ள பகுதியை தார்ச் சாலையாக மாற்றும் பணியை வருங்காலத்தில் மேற்கொள்ளலாம் என முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS